நில நேர்வுகளில் குடியானவர்கள் 7 தவணைகள் நிலுவை செலுத்த வேண்டும். இவர்களுக்கெல்லாம் 1968 ஜனவரித் திங்களில் முதல் கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

வசூலை ஒத்திவைக்கும் அளவுக்குப் பருவமழை தவறிவிடவில்லை. இப்பகுதியில் கணிசமான பரப்பளவு நிலத்தில் முந்திரி மரங்கள் அல்லது பலா மரங்கள் வளர்க்கப்படுகின்றன. பிற வட்டங்களில் இத்தகைய நிலங்களிலிருந்து குடியானவர் ஒருவருக்குக் கிடைக்கும் வருவாயைவிட மேற்சொன்ன வாயில்களிலிருந்து கிடைக்கும் வருவாய் அதிகமாகும். எனவே, கடம்புலியூர் பகுதிவாழ் மக்கள் கடன் தவணைகளைச் செலுத்த முடியாது என்று சொல்லுவது சரியல்ல. ஒரே தடவையில் பல தவணைகளைச் செலுத்த வேண்டிய நிலையிலுள்ள குடியானவர்களுக்கு ஏதாவது சலுகை காட்ட வேண்டுமா என்பது பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–30

4. அரசினர் தீர்மானம்

அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையுரிமைக் குழுவிற்கு பன்னிரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய அரசினர் தீர்மானத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, " தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளைச் சேர்ந்த 183-வது விதியின்கீழ், 1968–69-ம் நிதியாண்டுக்குரிய அவையுரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பன்னிரண்டு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும் " என்ற தீர்மானத்தைக் கொண்டுவருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

5. அறிவிப்பு

அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது அதைப்பற்றிய அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், அவையுரிமைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19-ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, பன்னிரண்டுக்கு மேற்படுமாயின், 25–3–1968 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS